FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-

C

1. District : Coimbatore PS: VBAC Year: 2020 FIR No.: 15/2020/AC/CB Date: 31-12-2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Act, 1988, as amended by Sections பிரிவுகள்: 7(a)
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 30-12-2020 Date to : நாள் வரை 31-12-2020
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 23.20hrs Time to : நேரம் வரை 07.30hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31-12-2020 Time : நேரம் 10.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 4km East
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o. NIB CID Backside to Roots Company Sanganoor Road, Ganapathy, Coimbatore.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : V. Maheswari
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Vijayakumar
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28/2020
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Coolie
(g) Address : முகவரி D.No.25, Behind Gandham work shop, Kavai Nagar, New busstand, Bhavani, Erode.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

① Tmt. Sarojini, Inspector of Police, NIB CID, CBE.
② Tr. Ramasamy, Head constable, O/o. Inspector of Police, NIB CID, Coimbatore

8. Reasons for delay in reporting by the Complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed in Separate Sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
V. மகேஸ்வரி 31.12.2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
31/12/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.12.2020

Name: பெயர் R. சுதீவாசி
Rank: நிலை ....... No. எண் .......
காவல் ஆய்வாளர், ஊரக பிரிவு, உதகை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 15/2020/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

31.12.2020-ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, ஈரோடு, பவானி, புது பஸ்ஸ்டேண்டு, காவேரி நகர், கதவு எண்-25, கந்தன் பட்டறை பின்புறம் என்ற முகவரியில் குடியிருந்து வரும் விஜயகுமார் மனைவி V.மகேஷ்வரி, வயது-23 என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோயம்புத்தூர் NIB CID இன்ஸ்பெக்டர் திருமதி.சரோஜினி மற்றும் தலைமைக் காவலர் திரு.ராமசாமி ஆகியோர்கள் வாதியின் கணவர் மீது பொய்யாக கஞ்சா வழக்கு போட்டும், பெரிய வழக்காக போடாமலும், விரைவில் பெயில் கிடைக்க ஏதுவாக சிறிய வழக்கு போட வேண்டி NIB CID இன்ஸ்பெக்டர் திருமதி.சரோஜினி மற்றும் த.கா. திரு.ராமசாமி ஆகியோர்கள் லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 31.12.2020-ம் தேதி காலை 11.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.15/2020/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act,

1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகள் NIB CID காவல் ஆய்வாளர் திருமதி.சரோஜினி மற்றும் தலைமை காவலர் திரு.ராமசாமி ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் V.மகேஷ்வரி, வயது-23, க/பெ.விஜயகுமார், கதவு எண்-25, கந்தன் பட்டறை பின்புறம், காவேரி நகர், புது பஸ்டேண்டு, பவானி, ஈரோடு. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான், மேற்படி விலாசத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் விஜயகுமார் கட்டிடங்களுக்கு சிமெண்ட் அட்டை கூரை போடும் கூலி வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். நான் ஆடு மேய்க்கும் வேலை செய்து வருகிறேன். நேற்று 30.12.2020 ஆம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் நானும் எனது மாமியார் சின்னபொண்ணுவும் வீட்டில் இருந்தோம். அந்த சமயம் எனது வீட்டிற்கு இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் வந்து என்னிடம் உனது புருஷன் எங்கே கேட்டார்கள். நான் அதற்கு அந்த பெண்ணிடம் எதுக்குக்கா கேட்கறீங்கன்னு கேட்டேன். அதுக்கு அவர் என்னைய என்ன அக்கான்னு கூப்பிடறே நான் யார் தெரியுமா NIB இன்ஸ்பெக்டர் என்றும் எம்பேரு சரோஜினிமா என்றும் சொல்லிவிட்டு உன் புருஷன் இல்லைன்னா உன்னையதான் கூட்டிட்டு போலாம்னு வந்தேன்னு மிரட்டுனாங்க. அதற்கு நான் எனது வீட்டுக்காரர் வேலைக்கு சென்று விட்டார் மேடம் என்று சொன்னேன். மேலும் அந்த இன்ஸ்பெக்டர் மேடம் என்னிடம் உன் புருஷன் மேல கஞ்சா கேஸ் போடனும்னு மிரட்டி அவன் எங்க இருந்தாலும் நாங்க பிடிச்சு அவன் மேல கஞ்சா கேஸ் போடுவோம் என்று சொல்லிட்டு சென்று விட்டார்கள். நான் பயத்தில் எனது கணவருக்கு எதும் பிரச்சினை ஆகக்கூடாது என்ற எண்ணத்தில் அவர் வேலை செய்யும் இடமான புளியம்பட்டி அடுத்து உள்ள புல்லாங்கவுண்டன்பட்டிக்கு பஸ்ஸில் சென்றேன். அங்கு நான் இரவு சுமார் 9.00 மணியளவில் எனது கணவர் கட்டிட வேலை செய்யும் இடத்தை சென்று அடைந்த போது மேற்படி என் வீட்டிற்கு வந்த அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் போலீஸ்காரர்களும் என் வீட்டுக்காரரிடம் ஏதோ மிரட்டி பேசி கொண்டிருந்தார்கள். அப்போது இன்ஸ்பெக்டர் மேடம் அங்கு இருந்த ஜீப்பில் முன்புற சீட்டில் உட்கார்ந்திருந்தார். நான் அந்த இன்ஸ்பெக்டரிடம் எதுக்கு மேடம் என் வீட்டுக்காரரை பிடிச்சீங்க அவர் என்ன வச்சிருந்தாரு சொல்லுங்கன்னு கேட்டேன். பின்பு எனது

கணவரிடம் என்ன வச்சிருந்த விஜயா உங்கிட்ட ஒன்னும் இல்லையில்ல ஏன் பிடிக்கிறாங்கன்னு கேட்டேன். அதற்கு எனது வீட்டுக்காரர் எங்கிட்ட பீடி, சிகரெட்டுதான் இருக்குது வேற ஒன்னும் இல்ல என்று சொன்னார். அப்போது இன்ஸ்பெக்டர் மேடம் அங்கிருந்த ஒரு போலீஸ்காரரிடம் ராமசாமி ஏட்டைய்யா அவன வண்டியில ஏத்துங்க என்று சொன்னவுடன் எனது வீட்டுக்காரரை மேற்படி போலீஸ்காரங்க வலுக்கட்டாயமாக சட்டையை பிடித்து இழுத்து அவங்க வந்த ஜீப்பில் இரவு சுமார் 9.30 மணிக்கு ஏத்தினாங்க பின்பு என்னிடம் அந்த ஜீப்பின் முன்புறம் உட்காந்திருந்த இன்ஸ்பெக்டர் மேடம் காலையில கோயம்புத்தூர் NIB ஆபிசுக்கு ஒரு லட்ச ரூபா பணத்துடன் வந்து சேருன்னு சொன்னாங்க. இரவு நேரம் என்பதாலும் என் குழந்தைகள் கூட இருந்ததாலும் நான் பவானியிலுள்ள எனது வீட்டிற்கு போய்விட்டேன். பின்பு ஒரு மணி நேரம் கழித்து எனது புருஷன் எனக்கு போன் பண்ணி ஒரு லட்சம் பணம் கொடுத்தா எம்மேல கேஸ் எதுவும் போடாம இப்பவே விட்டர்ரேன்னு இன்ஸ்பெக்டர் அம்மா சொல்றாங்கன்னு எங்கிட்ட சொன்னார். மறுபடியும் அரை மணிநேரம் கழிச்சு எனது புருஷன் எனக்கு போன் பண்ணி புள்ள ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தாலும் ஒரு சின்ன கேஸா போட்டு அப்பவே பெயில்ல விட்டுருவாங்களமான்னு சொன்னார். அதற்கு நான் பணத்தை ரெடி செய்து விட்டு வருகிறேன்னு சொல்லிட்டு எங்க வரணும்னு அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் கருமத்தம்பட்டி டோல்கேட்டுக்கு வர சொன்னாங்க. அதன் பேரில் நானும் உடனே காரை வாடகைக்கு எடுத்து கிளம்பி கருமத்தம்பட்டி டோல்கேட்டுக்கு சென்றேன். அப்போது அவர்கள் அங்கு இல்லை. எனவே நான் எனது போன் மூலமாக எனது வீட்டுக்காரருக்கு போன் செய்து எங்கு இருக்கீறீர்கள் நான் கருமத்தம்பட்டி டோல்கேட்டுக்கு வந்து விட்டேன் என்றும் டோல்கேட்டுக்கு அருகில் இருந்த டாய்லெட்ரூமுக்கு பக்கத்தில் நிற்கிறேன் என்று சொன்னேன். அவர்கள் கொஞ்ச நேரத்தில் அதாவது இரவு 11.30 மணிக்கு வந்து விட்டார்கள். பின்பு அந்த ஜீப்பில் இருந்து ராமசாமி போலீஸ்காரர் இறங்கி என்னிடம் வந்து பார்த்து உன் புருஷன் மேல 15 கிலோ கேஸ் போடவான்னும் அப்புறம் ஒரு வருசத்துக்கு வெளியிலயே வரமுடியாதுன்னும் சொன்னார். நான் அதெல்லாம் வேண்டாம் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் இன்ஸ்பெக்டர் மேடம் உன் புருஷன வண்டியில ஏத்தும்போதே அவன்கிட்ட ஒரு லட்சம் கேட்டாங்க அப்பவே கொடுக்கரேன்னு சொல்லியிருந்தா அங்கேயே இறக்கி விட்டுட்டு போயிருப்போம்

என்றும் ஆனால் டிஎஸ்பி கிட்ட சொல்லிட்டதால்ல ஒரு சின்ன கேசாவது போட்டாகனும்னு சொன்னாரு. அந்த போலீஸ்காரர் நாங்க சொன்ன பணத்த கொண்டு வந்திட்டியானு கேட்டார். அதற்கு நான் நைட்டு நேரம் ஆனதால அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியல சார் இப்ப என்கிட்ட முப்பதாயிரம் தான் இருக்குது இத வாங்கிங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர் இன்ஸ்பெக்டர் மேடத்துக்கு போன் செய்து இந்த விவரத்தை சொன்னாரு அப்போது போன் பேசிக் கொண்டிருந்தபோது என்னை பார்த்து மேடம் உன்னைய அப்படியே ஓடிருன்னு சொல்ல சொல்றாங்கன்னு சொன்னார். எனது வீட்டுக்காரர் அந்த ஜீப்பில் இருந்தார். டிரைவரும் இருந்தார். பின்னர் அவர் சரி இப்ப அந்த முப்பதாயிரத்த கொடு பாக்கி எழுபதாயிருத்த ரெடி பண்ணி காலையில 7 மணிக்கு கோயம்புத்தூர் NIB ஆபிசுக்கு வந்துரு என்று சொல்லிவிட்டு என்னிடம் இருந்த முப்பதாயிரத்தை எனது வீட்டுக்காரரிடம் கொடுக்க சொன்னதால் நானும் ஜீப்பினுள் இருந்த எனது வீட்டுக்காரரிடம் கொடுத்தேன். உடனே அந்த பணத்தை எனது வீட்டுக்காரரிடமிருந்து அந்த போலீஸ்காரர் வாங்கிவிட்டு மீதி எழுபதாயிருத்தை காலையில ஆபிசுக்கு வரும்போது கொண்டு வந்துரு என்று சொல்லி டோல்கேட்டிலிருந்து கிளம்பி சென்று விட்டார்கள். இன்று 31.12.2020-ம் தேதி காலையில 7.30 மணிக்கு நான் எனது வீட்டுக்காரரிடம் போன் செய்து கோயம்புத்தூர் வந்திட்டேன்னு சொன்னேன். அதுக்கு அவர் கணபதியில் இருக்கிற ரூட்ஸ் கம்பெனிக்கு பின்புறம் வந்திருன்னு சொன்னார் நான் விசாரிச்சு NIB ஆபீசுக்கு போனேன் அப்போது அங்கு ஏற்கனவே ஜீப்பை ஓட்டி வந்த போலீஸ்காரர் ஆபீசிலிருந்து வெளியில் வந்து நாங்க சொன்ன பணம் ரெடி பண்ணியாச்சா என்று கேட்டார் சார் 60,000/ம் தான் ரெடி பண்ணியிருக்கேன்னு சொன்னேன் அதுக்கு அவர் நாங்க நேத்து நைட்டே சொன்னேன்ல இப்படி பண்ணின்னா எப்படி மீதி பணத்தை இங்க லோக்கல்ல ரெடி பண்ணிட்டு காந்திபுரம் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து கூப்பிடு என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள். நான் மேற்படி NIB போலீஸ்காரங்க கேட்ட பணத்தை என்னோட தாலியையும் எனது குழந்தையின் செயினையும் எனக்கு தெரிஞ்சவங்க கிட்ட அடமானம் வைத்து ஏற்பாடு பண்ணினேன். ஆனால் நான் யோசித்து பார்த்ததில் எனது வீட்டுக்காரர் மேல் பொய்யாக கஞ்சா கேஸ் போட்டும் கேட்ட பணத்தை கொடுக்கலனா ஒரு வருசத்திற்கு வெளியில வரமுடியாதபடி பெரிய கேசா போட்டுருவேன்னு மிரட்டி சீக்கிரம் பெயில்ல வர்ற மாதிரி சின்னகேஸ் போட்டு ரிமாண்டு பண்ண பணம் கேட்கும்

NIB இன்ஸ்பெக்டர் சரோஜினி மேடம் மற்றும் அவர்களுடன் வந்திருந்த ராமசாமி போலீஸ்காரர்க்கும் லஞ்சமாக பணம் ரூ.70,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இடம்: கோவை நாள்: 31.12.2020 இப்படிக்கு, sd/-(xxxx) 31.12.2020 Madam, Received the complaint on 31.12.2020 at 10.30 hrs sd/-(xxxx) 31.12.2020 (R.Ezhilarasi), Inspector of Police, V&AC, Coimbatore. Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.15/2020/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 31.12.2020 at 11.30 hrs sd/-(xxxx) 31.12.2020 (R.Ezhilarasi), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

31/12/2020

(R. எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.